ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1733/47 - 2011 නොවැම්බර් 25 වැනි සිකුරාදා - 2011.11.25

*1733/47 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பீ. 11/81*

***1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டம்***

*1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவுடனான கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் :-*

மைத்திரிபால சிறிசேன,
*சுகாதார அமைச்சர்.*

கொழும்பு,
*2011, நவெம்பர் 16.*

ஒழுங்குவிதிகள்

*1994, ஓகத்து 31 ஆந் திகதிய 834/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1994 ஆம் ஆண்டின் உணவு (பாண் தராதரங்கள்) ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.*

(1) அதன் 01.2 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவனவற்றை இடுவதன் மூலமும் :-

"01.2 விரும்பிய சேர்பொருட்கள்-

(அ) சீனி ;
(ஆ) பாலும் பால் உற்பத்திப் பொருட்களும் ;
(இ) மரவள்ளி மாவு, அரிசி மாவு, குரக்கன் மாவு, சோளன் மாவு, சோயா மாவு, உருளைக்கிழங்கு மாச்சத்து மற்றும் வேறு ஏதேனும் உண்ணத்தக்க மாவுகள் அத்துடன் உண்ணத்தக்க எண்ணெய் விதைகள் ;
(ஈ) குளூற்றன் மாவின் அடர்த்தியில் 2 சதவீதத்தை விஞ்சாமல் ;
(உ) விற்றமின் பி 1, நிகடினிக் அமிலம் அல்லது நிகடினமயிற் ஐதரோகுளோரைட்டு மாவின் அடர்த்தியின் 0.25 சதவீதத்தை விஞ்சாமல் ;
(ஊ) மோற்று உற்பத்திகள்: மாவின் அடர்த்தியில் 2 சதவீதத்தை விஞ்சாமல் ; அத்துடன்
(எ) அனுமதிக்கப்பட்ட பதனிடும் பதார்த்தங்கள்." ; அத்துடன்

(2) அதன் 02.4 ஆம் ஒழுங்குவிதியின் முடிவில் பின்வரும் புதிய ஒழுங்குவிதியினைச் சேர்ப்பதன் மூலமும் :-

"3. பாண் ஒன்றின் தயாரிப்பில் 01.2 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் விருப்பத்தேர்விலான மாவு சேர்க்கப்பட்டிருக்கின்றவிடத்தும் சேர்க்கப்பட்ட விரும்பிய மாவின் சதவீதம் 10% m/m ஐவிட குறைவாக அல்லாமல் இருக்கின்றவிடத்தும், அத்தகைய விருப்பத்தேர்விலான மாவின் பெயர் பாணில் பெயரிடப்படலாம்.".

*12 - 443*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.